முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

அ.சா. 1 தேதி.20.08.2024

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 24/2023 | | |
| பெயர் | மணிவேலன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் முலப்பாக்கம், தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் ஸ்கேன் மற்றும் பிரிண்டிங் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 2ஆம் எதிரியின் மகளும், நானும் காதலித்து வந்தோம். எங்களது காதல் எதிரிகளுக்கும் தெரியும். 25.06.2021 அன்று முலப்பாக்கம், தெற்கு தெருவில் மாலை 5 மணிக்கு எதிரிகள் இருவரும் என்னை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று திட்டினார்கள். 1ஆம் எதிரி செங்கற்களால் எனது தலையின் பின்மண்டையில் அடித்தார். எனது முன்பக்க நெற்றியின் மேல் பக்கத்திலும் அடித்தார். 2ஆம் எதிரி அங்கு கிடந்த கட்டையை எடுத்து எனது நெஞ்சிலும், தலையிலும் அடித்தார். 2ஆம் எதிரி என்னை இத்தோடு செத்து போடா என்று சொல்லி அடித்தார். சத்தம் கேட்டு ஊர்காரர்களான கமல்ராஜ், மதியழகன் மற்றும் சிலர் ஓடி வந்தார்கள். அடிப்பட்டவுடன் என்னை மயிலாடுதுறையில் உள்ள அருண்பிரியா தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கிருந்து என்னை கும்பகோணம் சுகம் மருத்துவ மனைக்கும், பிறகு தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் சேர்த்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக பாண்டிசேரி, ஜிப்மர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். நான் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டார். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருட்களான செங்கல் மற்றும் கட்டையால் தான் என்னை எதிரிகள் அடித்தார்கள்.

அது ச.பொ. 1, 2 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். குறுக்கு விசாரணை இல்லை.